Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC. No. 378/2025

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 1

| | | | |
|---|---|---|---|
| Name: | யுவராஜ் | Calling: | முதல் நிலை காவலர் |
| Father's Name: | ஜெயராமன் | Religion: | |
| Village: | நாட்றம்பள்ளி | Age: | 35 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 03.25 PM

( எதிரி ஆஜர். )

அ.சா. 1 முதன்மை விசாரணை

நான் தற்போது ஏலகிரி மலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.06.2023 ம் தேதி பகல் 12.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. ராஜ்குமார் மற்றும் காவலர் திரு. நவீன் ராஜ் 885 என்பவர்களுடன் கோணாமேடு VMC காலனிக்கு ரோந்து சென்றபோது ஆஜர் எதிரி எங்களை பார்த்ததும் தப்பி ஓடினார். அப்போது நான் தான் அவரை இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்கி பிடித்தேன். அப்போது அவரை பரிசோதனை செய்தபோது அவர் Old Secret XXX Rum 4, Old Monster XXX Rum 2, Diamond XXX Rum 4 ஐ அவர் வீட்டு பக்கத்தில் வைத்திருந்தார். பிறகு நானும் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் நவீன்ராஜ் ஆகியோர் அதைக்கைப்பற்றி உதவி ஆய்வாளர் கைப்பற்றதல் மகசர் தயார் செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிறகு எதிரியை பகல் 12.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் கொண்டு

வந்து பாராவசம் ஒப்படைத்தோம். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

சம்பவ தேதியில் மதுவேட்டைக்காக எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து சென்றோம் என்றால் சுமார் 11.00 மணிக்கு சென்றோம். நாங்கள் ஆளுக்கு ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். மதுவேட்டைக்காக நாங்கள் முதலில் எங்கு சென்றோம் என்றால் காமராஜபுரம், பிகேஆர் லைன், கோணாமேடு சர்ச் மற்றும் இறுதியாக VMC காலனிக்கு சென்றோம் என்றால் சரிதான். எதிரியின் வீடு ஊருக்கு நடுவே உள்ளது என்றால் இல்லை, ஸ்கூல்க்கு அருகில் உள்ளது. எங்களை பார்த்ததும் எதிரி தப்பி ஓட முயற்சித்தார் என்றால் சரிதான். எவ்வளவு தூரம் சென்றார் என்றால் இரயில்வே தண்டவாளத்திற்கு சற்று முன்பு ஓடினார். நான்தான் அவரை துரத்தி சென்று பிடித்தேன் என்றால் சரிதான். அவரை பிடித்துக்கொண்டு உடனடியாக காவல் நிலையத்திற்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான், அதற்கு முன் அங்கு கைப்பற்றிதல் மகசர் தயார் செய்தோம். நாங்கள் துரத்தி சென்றதை எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் 20 முதல் 30 நபர்கள் பார்த்தார்கள். எதிரியிடம் இருந்து மதுபாட்டில்களை கைப்பற்றியபோது எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் 20 நபர்கள் பார்த்திருப்பார்கள். சம்பவத்தை பார்த்த 20 நபர்களில் யாரையேனும் உதவி ஆய்வாளர் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் யாரும் சாட்சி சொல்ல முன்வரவில்லை. எத்தனை நபர்களிடம் சாட்சியாக இருக்கும் படி கேட்டார் என்றால் அனைவரிடமும் கேட்டார், ஆனால் யாரும் முன்வரவில்லை. சம்பவயிடத்தில் தான் கைப்பற்றுதல் மகசர் தாயர் செய்தோம் என்றால் சரிதான். நான் சொல்லும் வகையில் எதிரியிடம் இருந்து எந்த வழக்கு சொத்தையும் கைபற்றவில்லை என்றாலும் சொல்லும்வாறு கைது செய்யவில்லை என்றாலும் எதிரியை சந்தேகத்தின் பேரில் அழைத்து வந்து காவல் நிலையத்தில் ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.
சாட்சி கையொப்பம்
(ஓம்.) யுவராஜ்

SRIPATHI K Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 378/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 2

| | | | |
|---|---|---|---|
| Name: | நவீன்ராஜ் | Calling: | காவலர் |
| Father's Name: | ராஜா | Religion: | |
| Village: | ஆம்பூர் | Age: | 32 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 03.40 PM

( எதிரி ஆஜர். )

அ.சா. 2 முதன்மை விசாரணை

நான் தற்போது வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.06.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு ரோந்துபணிக்காக உதவி ஆய்வாளர் திரு. ராஜ்குமார் அவர்களின் தலைமையில் நானும் முதல் நிலை காவலர் திரு. யுவராஜ் 560 ஆகியோரும் முதலில் ஒரு நான்கு, ஐந்து இடங்களுக்கு சென்று பிறகு கோணாமேடு VMC காலனிக்கு சென்றோம். அங்கு அரசு பள்ளிக்கு பக்கத்தில் ஒரு வீட்டின் அருகில் ஒரு நபர் உட்கார்ந்திருந்தார். அப்போது உதவி ஆய்வாளர் சீருடையில் இருந்ததை பார்த்து அந்த நபர் ஓட ஆரம்பித்தார். உதவி ஆய்வாளருக்கு பின்னால் அமர்ந்திருந்த முதல் நிலை காவலர் 560 அவரை துரத்திக்கொண்டு போனார். நானும் எனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு பின்னால் ஓடினேன். அவர் இரயில்வே தண்டவாளத்திற்கு அருகே செல்லும் போது மேற்படி ஓடிய நபரை முதல்நிலைக்காவலர் யுவராஜ் பிடித்துவிட்டார். நானும் பின்னால் இருந்தேன். அவரை கைது செய்யும் போது 12.00 மணியிருக்கும். அவர் உட்கார்ந்திருந்த இடத்தை சுற்றி பார்த்தபோது

வீட்டுக்கு பக்கத்தில் உள்ள ஒரு பையில் பாட்டில்கள் இருந்தது. மொத்தமாக 10 பாட்டில்கள் இருந்தது. அதில் Diamon Rum 4, Old secret Rum 4, Old Monsder Rum 4 இருந்தது. அங்கு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் . என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்வதற்காக உதவி ஆய்வாளர் பொதுமக்களை அழைத்த போது யாரும் முன்வரவில்லை. அதனால் நாங்களே கையொப்பம் செய்தோம். பிறகு அந்த நபரை காவல் நிலையம் அழைத்து வந்து பாராவசம் ஒப்படைத்தோம். ஆஜர் எதிரிதான் அந்த நபர். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

காவல் நிலையத்தில் இருந்து ரோந்துக்காக எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 11.00 மணிக்கு. நாங்கள் மூவரும் வெவ்வெறு வண்டியில் சென்றோமா என்றால் நான் தனியாக ஒரு இருசக்கர வாகனத்திலும், உதவி ஆய்வாளர் மற்றும் முதல் நிலைகாவலர் இருவரும் ஒரு வண்டியில் வந்தார்கள். மதுவேட்டைக்காக முதலில் எங்கு சென்றோம் என்றால் முதலில் காமராஜபுரம் சென்றோம்.பிறகு PKR அண்ணா நகர் சென்றோம், பிறகு கோணாமேடு , இறுதியாக VMC காலனிக்கு சென்றோம். VMC காலனிக்கு தெருவில் தான் செல்லவேண்டும் என்றால் நகராட்சி கழிப்பறைக்கு செல்லும் வழியில் செல்லலாம். அந்த வழியில் தான் நாங்கள் ஊருக்குள் சென்று எதிரியின் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். எங்களை பார்த்ததும் எதிரி ஓடினார் என்றால் சரிதான். அவரை நாங்கள் துரத்தி சென்றோம் என்றால் சரிதான். எவ்வளவு தூரம் துரத்தி சென்றோம் என்றால் 50–60 மீட்டர் இருக்கும். அவரை பிடிக்கும் போது அவரிடம் எந்தவித வழக்கு சொத்தும் இல்லை என்றால் சரிதான். எதிரியை பிடித்தவுடன் காவல் நிலையத்திற்கு வந்து விட்டோம் என்றால் இல்லை, அவர் இருந்த இடத்தை தேடி அங்கிருந்த பொருட்களை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து பிறகு தான் காவல் நிலையம் கொண்டு வந்தோம் .கைப்பற்றுதல் மகசரை யார் தயார் செய்து என்றால் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதிலிருந்து நாங்கள் எவ்வளவு மாதிரிகளை சேகரித்தோம் என்றால் மாதிரிகள் எதுவும் எடுக்கவில்லை. ஆனால் நான்கு பாட்டில்கள் திறந்த நிலையில் இருந்தது. நான் எதிரியை பிடிக்கும் போது எத்தனை

நபர்கள் பார்த்திருப்பார்கள் என்றால் 25–30 நபர்கள் பார்த்திருப்பார்கள். பாட்டில்கள் எதில் இருந்தது என்றால் சிமென்ட் பையில் இருந்தது. அந்த சிமென்ட் பையில் இருந்து தான் பாட்டில்கள் எடுத்தோம் என்றால் சரிதான். சிமென்ட் பையுடன் சேர்த்து பாட்டில்களை காவல் நிலையத்திற்கு எடுத்துவந்தோம் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு எடுத்துவந்து வழக்கு ஆவணங்களை தயார் செய்தோம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தயார் செய்தோம். கைப்பற்றுதல் மகசரை எங்கு தயார் செய்தோம் என்றால் சம்பவயிடத்தில் தயார் செய்தோம். சிமென்ட் பையுடன் கைப்பற்றுதல் மகசரில் தாயர் செய்தோம் என்றால் இல்லை, பாட்டில்கள் மட்டும் தான் தயார் செய்தோம். நான்கு பாட்டில்கள் மூடி திறந்த நிலையில் இருந்ததை உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையிலோ, இறுதி அறிக்கையிலோ தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. சாட்சிகள் யாரும் முன்வராததை குறித்து எனது உதவி ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, அவ்வாறு நான் கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். நான் சொல்லும்வாறு எதிரியை பிடிக்கவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும், மேல் அதிகாரிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) நவீன்ராஜ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 378/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 3

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜ்குமார் | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | மார்கண்டர் | Religion: | |
| Village: | கௌளாப்பறை, அரூர் | Age: | 30 |
| Taluk: | தர்மபுரி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 04.05 PM

( எதிரி ஆஜர். )

அ.சா. 3 முதன்மை விசாரணை

நான் தற்போது திருப்பத்தூர் சைபர் கிரைம் பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.06.2023 ம் தேதி காலை 11.00 முதல் 11.30 மணி அளவில் மதுவேட்டைக்காக நானும், முதல் நிலை காவலர் திரு.யுவராஜ் 560, காவலர் திரு. நவீன்ராஜ் 885 ஆகியோரும் முதலில் காமராஜபுரம், அண்ணாநகர், கோணாமேடு சர்ச், கோணாமேடு VMC காலனி ஆகிய இடங்களுக்கு சென்றோம். VMC காலனிக்கு சென்றபோது நானும் முதல் நிலை காவலர் திரு.யுவராஜ்யும் ஒரு வாகனத்திலும் காவலர் திரு. நவீன்ராஜ் ஒரு வாகனத்திலும் சென்றோம். எங்களை பார்த்ததும் அங்கிருந்த நபர் ஓடினார். அவரை ஓடியதை பார்த்து நாங்கள் வண்டியை நிறுத்திவிட்டோம். அப்போது முதல் நிலை காவலர் திரு.யுவராஜ் வண்டியில் இறங்கி ஓடியநபரை பிடிக்க சென்றார். அவர் பின்னால் திரு.நவீன்ராஜ்யும் சென்றார். இருவரும் 40-50 மீட்டர் தொலைவில் இரயில்வே

தண்டவாளத்தின் அருகே எதிரி செல்லும் போது பிடித்துவிட்டனர். நானும் பிறகு சென்றேன். பிறகு அவரை விசாரித்தபோது முதலில் அவர் பெயர், முகவரி எதுவும் சொல்லவில்லை. பிறகு தான் அவர் பெயர் விநாயகமூர்த்தி என கூறினார். அவர் எங்கிருந்து ஓடினாரோ அந்த இடத்தை சோதனை செய்தபோது அந்த இடம் அவருக்கு சொந்தமான இடம் என்று தெரியவந்தது. அப்போது அவரது வீட்டிற்கு பின்பகுதியில் ஒரு சிமெண்ட் பையில் 10 பாட்டில்கள் இருந்தது. Diamond Bottle –4, Secret Rum –4, Old Monster –2 இருந்தது. நான்கு பாட்டில்கள் மட்டும் மூடி சற்று திறந்த நிலையில் இருந்தது. அந்த பாட்டில்களை குறித்து விசாரித்தபோது தெரியாமல் செய்துவிட்டதாகவும் மன்னித்துவிடும் படியும் கூறினார். பிறகு அவரை கைதுக்கான காரணம் கூறி 12.15 மணிக்கு கைது செய்து அந்த விவரத்தை அவரது நண்பர் முத்துகுமாருக்கு தெரிவித்தோம். அங்கு 20–30 நபர்கள் இருந்தார்கள். அந்த இடத்திலேயே கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம். கைப்பற்றுதல் மகசர் தயாரித்ததற்கு சாட்சியாக அங்கிருந்த நபர்களை அழைத்தோம். அவர்கள் முன்வரவில்லை. அதனால் என்னுடன் இருந்த காவலர்களை சாட்சியாக இருக்க கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றிய பொருளை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். அலுவலக வேலைகள் இருந்ததால் வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து வழக்கு சொத்து எண் பெற இயலவில்லை. (படிவம் 91 வழக்கு கோப்பில் இல்லாததால் குறியீடு செய்ய இயலவில்லை) பிறகு எதிரியை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து எதிரிக்கு எதிராக குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப காவல் நிலைய குற்ற எண் 379/2023 4(1)(a),4(1)(h) TNP Act படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்து , கணினியின் மூலம் கைது அட்டை , படிவம் 91 , காவல் அடைப்பு அறிக்கை தயார் செய்து பாராவசம் ஒப்படைத்தேன். பிறகு எதிரியை 06.06.2023 நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அன்றைய தினமே புலன் விசாரணையை முடித்து குற்றம் உண்மையென தெரியவந்ததால் 14.06.2023 ம்தேதி எதிரியின் மீது 4(1)(a),4(1)(h) TNP Act இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச 161(3) ன்கீழ் உள்ளதைப்போல் தான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி 50 மீட்டர் தப்பி ஓட பார்த்தார் என்றும் அவரை நான் தான் இரயில்வே தண்டவாளத்திற்கு செல்வதற்கு சற்று முன்பே பிடித்தேன் என சாட்சியம அளித்துள்ள நிலையில் அவரது 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் எதிரியை ஓடி பிடித்ததாக அவர் சொல்லவில்லை. அவரை பிடித்து பரிசோதனை செய்தபோது தான் அவரிடம் 10 பாட்டில்கள் இருந்து என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் வாக்குமூலத்தில் அவ்வாறு சொல்லவில்லை. எதிரி 50 மீட்டர் தூரம் ஓடியதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 ன் வாக்குமூலத்தில் எதிரி பாட்டில்களை வைத்திருந்ததாக தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். நான்கு பாட்டில்கள் திறந்த நிலையில் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் கைப்பற்றுதல் மகசரிலும் மற்றும் வாக்குமூலத்திலும் அதுபோன்று எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். பொதுமக்களை சாட்சியாக அழைத்து யாரும் முன்வராததை குறித்து எனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளேன். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை என்று எங்கும் நாங்கள் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றிய வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேனா என்றால் அனுப்பிக்கொண்டேன்.எந்த தேதியில் அனுப்பினோம் என்றால் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியபோதே அனுப்பிக்கொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்து சேதம் அடைந்தது குறித்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்ட அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. அந்த ஆவணம் நான் தயார் செய்தது இல்லை என்றால் சரிதான். நான் தயார் செய்த படிவம் 91 என்னுடைய வழக்கு கோப்பில் உள்ளதா என்றால் இல்லை. தனிநபர் சாட்சிகளை அழைத்து யாரும் முன்வரவில்லை என்று சொல்லியுள்ள நிலையில் அந்த நபர்களின் பெயர் விவரம் தெரியுமா என்றால் அவர்கள் அதை கூறவில்லை. எனது விசாரணையில் தனிநபர் சாட்சிகளை அழைத்து அவர்கள் முன்வராததை குறித்து சாட்சிகள் சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். அவ்வாறு சாட்சிகள் சொல்லவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. எனது

கையொப்பத்தை தவறாக போட்டு அறிக்கை சமர்பித்தது தொடர்பாக புகார் அளிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் தரப்பில் அது சம்மந்தமாக அது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. நான் எதிரியை வழக்கு சொத்துடன் கைது செய்யவில்லை என்றாலும் அவ்வாறு கைது செய்திருந்தால் வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி இருப்பேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு ஒப்படைத்த நபர் யார் என்றால் சரியாக நினைவில்லை. நான் எதிரியை வழக்கு சொத்துடன் கைது செய்யவில்லை என்றாலும் விசாரணைக்காக நான் அவரை காவல் நிலையம் அழைத்து வந்து அவருக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் புள்ளியியல் காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராஜ்குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K